இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 08-10-2025

# காந்தியார் பேசியது என்ன?

இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள், ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தை புகழும் தேவைக்காக அண்ணல் காந்தியார் வரலாற்றைத் திரித்துப் பேசி இருக்கிறார். அவரது உரை தவறானது மட்டுமல்ல, கண்டிக்கத்தக்கது ஆகும். காந்தியாருக்கு ஏற்படுத்தும் அவமானம் ஆகும்.

நாக்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய ராம்நாத் கோவிந்த், "ஒரே கோயில், ஒரே கிணறு, ஒரே மயானம் என்ற சமூக சமத்துவம், ஒற்றுமைக்காக ஆர்.எஸ்.எஸ். திகழ்கிறது. ஏழ்மையான பகுதிகளில் கல்வி, சுகாதாரத்தை மேம்படுத்த தொடர்ந்து பல சமூக சேவைகளை இந்த அமைப்பு செய்து வருகிறது.

சமூக நல்லிணக்கம், சமத்துவம், சாதிய பாகுபாடில்லாத செயல்பாடுகள் மகாத்மா காந்தியை பெரிதும் ஈர்த்தது. ஆர்.எஸ்.எஸ். அமைப்பினரின் ஒழுக்கம், எளிமை, தீண்டாமைக்கு எதிரான செயல்பாடுகள் அவரை கவர்ந்தன. இது தொடர்பாக, 'மகாத்மா காந்தியின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள்' என்ற புத்தகத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்" என்று பேசி இருக்கிறார்.

1947 செப்டம்பர் 16 அன்று டெல்லி பங்கி காலனியில் (நகர சுத்தி தொழிலாளர் குடியிருப்பில்) ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களிடையே பேசுகையில் காந்தியார் பாராட்டிப் பேசியதாக ராம்நாத் கோவிந்த் அவர்கள் சொல்கிறார்கள். காந்தியாரின் முழு உரையை ராம்நாத் அவர்கள் படிக்க வேண்டும்.

1947 செப்டம்பர் 16 ஆம் நாள், அதாவது இந்தியா சுதந்திரமடைந்து சரியாக ஒரு மாதம் கழித்து பங்கி காலனியில் கூடியிருந்த 500 ராஷ்டிரிய சேவா சங்க உறுப்பினர்கள் மத்தியில் காந்தி பேசிய போது என்ன சொன்னார் தெரியுமா?

"உங்கள் சங்கத்தை ஸ்தாபித்தவரான ஸ்ரீஹெட்கேவார் உயிருடனிருந்த போது பல ஆண்டுகளுக்கு முன்னால், வார்தாவுக்கு அருகிலிருந்து ராஷ்டிரிய சேவா சங்க முகாமுக்கு நான் வந்திருக்கிறேன். அவர்களிடமிருந்த கட்டுப்பாடு, தீண்டாமையை அடியோடு அவர்கள் ஒழித்திருந்தது, அவர்களுடைய கண்டிப்பான எளிமை ஆகியவை என்னை அதிகமாகக் கவர்ந்தன. அதன்பிறகு சங்கம் வளர்ந்திருக்கிறது. சேவை, தன்னலத் தியாகம் ஆகியவைகளைக் கொண்ட எந்த நிறுவனமும் பலமுள்ளதாக வளர்ந்தே தீரும் என்பதை நான் நன்றாக அறிவேன்." என்று சொல்லி விட்டு ...

**"ஆனால் அந்த நிறுவனம் உண்மையிலேயே பலனுள்ளதாக இருப்பதற்கு, தன்னலத் தியாகத்துடன் நோக்கத்தின் தூய்மையும், உண்மையான அறிவும் கலந்திருக்க வேண்டியது அவசியம். இந்த இரண்டும் இல்லாத தியாகம், சமூகத்தின் நாசமாகவே முடிகிறது என்பது நன்றாகத் தெரிந்திருக்கிறது. ஆரம்பத்தில் பாடப்பட்ட பிரார்த்தனை கீதம், இந்தியத் தாயையும், ஹிந்து கலாச்சாரத்தையும், ஹிந்து மதத்தையும் போற்றுகிறது.**

**நான் சனாதனி ஹிந்து என்று கூறிக் கொள்ளுகிறேன். எனவே துரதிஷ்ட வசமாக இன்று இருந்து வருவதைப் போன்று, இஸ்லாமிடமோ அதைப் பின்பற்றுகிறவர்களிடமோ இந்து மதத்திற்கு எந்தச் சச்சரவும் இருப்பதற்கில்லை. தீண்டாமை என்ற விஷம் நம் மதத்தில் புகுந்துவிட்ட போதே, அதற்குச் சரிவும் ஆரம்பமாகிவிட்டது. தீண்டாமை உயிருடன் இருக்குமானால், நம் சமயம் செத்துத்தான் ஆக வேண்டும்.**

**அதே போல, இந்தியாவில் இந்துக்களைத் தவிர வேறு யாருக்கும் இடமில்லை என்று இந்துக்கள் நினைப்பதாயிருந்தால், இந்துக்களல்லாதவர்கள், முக்கியமாக முஸ்லிம்கள் இங்கே வாழ விரும்பினால் இந்துக்களின் அடிமைகளாகத் தான் வாழ வேண்டும் என்று நினைத்தால், இந்துக்கள் இந்து மதத்தையே கொன்று விடுகிறார்கள்.**

**இதே போன்று பாகிஸ்தானில் முஸ்லிம்களுக்கு மாத்திரமே நியாயமான உரிமை உண்டு என்று பாகிஸ்தான் நம்பினால், முஸ்லிம் அல்லாதவர்கள் தங்களுக்குத் தாழ்ந்தவர்களாகவும் தங்கள் அடிமைகளாகவுமே வாழ முடியும் என்று நம்பினால், இந்தியாவில் இஸ்லாமுக்கு சாவு மணி அடித்துவிட்டதாகவே ஆகும்.**

**இந்தியா இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது என்பது துரதிஷ்டமான உண்மை. இதில் ஒரு பகுதி வெறி பிடித்துப் போய் ஆபாசமான செய்கைகளைச் செய்து வருமானால், அதனால் இன்னுமொரு பகுதியும் அதே போலச் செய்ய வேண்டுமா? தீமை செய்தவர்களுக்குத் திருப்பித் தீமையையே செய்வதில் லாபம் ஏதும் இல்லை. தீமை செய்தாருக்கும் நன்மை செய்யுமாறு மதம் நமக்குப் போதிக்கிறது.**

**ஹிந்துக்களில் ஏராளமானவர்கள், ஒரு குறிப்பிட்ட வழியில் தான் தாங்கள் செல்ல வேண்டும் என்று விரும்புவார்களானால், அந்த வழி தவறானதாகவே இருந்தாலும், அவர்களை யாரும் தடுத்துவிட முடியாது. ஆனால் அவர்கள் போகும் வழி தவறானது என்று சொல்லவும், அவர்களை எச்சரிக்கை செய்யவும் ஒரு தனிநபருக்கு உரிமை உண்டு. இதையே நான் செய்து கொண்டிருக்கிறேன்.**

**நான் முஸ்லிம்களின் நண்பன் என்றும், ஹிந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் விரோதி என்றும் என்னைச் சொல்லுகிறார்கள். பார்சிகளுக்கும் மற்றவர்களுக்கும் நண்பனாக இருப்பதைப் போன்றே முஸ்லிம்களுக்கும் நான் நண்பன் என்பது உண்மை. இதில் நான் என் பன்னிரண்டாவது வயதில் இருந்ததைப் போன்றே இன்றும் இருக்கிறேன். ஆனால் என்னை ஹிந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் விரோதி என்று சொல்கிறவர்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. ஹிந்துக்களுக்கும் சீக்கியருக்கும் மாத்திரமல்ல, யாருக்குமே எதிரியாக நான் இருக்க முடியாது.**

**சங்கம் ஒழுங்கான அமைப்புடையது. கட்டுப்பாட்டோடு கூடிய நிறுவனம். அதன் பலத்தை இந்தியாவின் நன்மைக்காகவோ, இந்தியாவுக்கு எதிராகவோ உபயோகிக்க முடியும். சங்கத்தின் மீது கூறப்படும் புகார்களில் ஏதாவது உண்மையும் உண்டா என்பது எனக்குத் தெரியாது. குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதை ஒரே மாதிரியான தனது நடவடிக்கைகளின் மூலம் நிரூபிக்க வேண்டியது சங்கத்தின் பொறுப்பு."**

- இதுதான் காந்தியாரின் முழு உரையாகும். இது 'அரிஜன்' இதழில் 28.9.1947 அன்று வெளியாகி உள்ளது. காந்தி தொகுப்பு நூல் 9 இல் 689 ஆம் பக்கம் முதல் 692 ஆம் பக்கம் வரை இருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பை இதில் காந்தி பாராட்டி இருக்கிறாரா? புத்திமதி சொல்லி இருக்கிறாரா? இந்து இசுலாம் வேறுபாடு பார்க்காதீர்கள் என்பது தானே அவரது உரையின் உள்ளடக்கம். இதனை ஆர்.எஸ்.எஸ். இயக்கம் ஏற்றுக் கொள்கிறதா? இல்லை.

**இதற்கு நான்கு மாதம் கழித்து அண்ணல் கொலை செய்யப்பட்டார்!**




கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.10.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், "உடன்பிறப்பே வா" என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வில், மதுரை தெற்கு மற்றும் சிவகாசி சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.

# சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் மழைநீர் இணைப்பு கால்வாய் பணி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நள்ளிரவில் பார்வையிட்டார்!

**சென்னை, அக். 8 - சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வி.பி. ராமன் சாலை, ராயப்பேட்டை நெடுஞ்சாலை மற்றும் மாசிலாமணி சாலைகள் சந்திப்பில் கட்டப்பட்டு வரும் மழைநீர் இணைப்பு கால்வாயை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 6.10.2025 அன்று இரவு சேப்பாக்கம் -திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வி.பி.ராமன் சாலையில், வருகின்ற பருவமழை காலங்களில் மழைநீர் தேங்காத வகையில், எளிதாக பக்கிங்காம் கால்வாய்க்கு செல்லும் வகையில் மழைநீர் வடிகால் கால்வாயில் தூர்வாரப் பட்டு உள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து வி.பி.ராமன் சாலை, ராயப்பேட்டை நெடுஞ்சாலை மற்றும் மாசிலாமணி சாலைகள் சந்திப்பு பகுதியில், ராயப்பேட்டை நெடுஞ்சாலை மற்றும் மாசிலாமணி சாலை களில் புதிதாக கட்டப்பட்டு உள்ள மழைநீர் கால்வாய்களை இணைக்கும் வகையில் கட்டப்பட்டு வரும் இணைப்பு கால்வாய் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மழைநீர் வடிகால் இணைப்பு கால்வாய் பணிகளை விரைந்து முடிக்குமாறு துணை முதலமைச்சர் அவர்கள், அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

புதிதாக கட்டப்பட்டு வரும் மழைநீர் கால்வாய்கள் மூலமாக வி.பி. ராமன் சாலை பகுதியில் மழைநீர் எளிதாக பக்கிங்காம் கால்வாய்க்கு சென்று அங்கிருந்து கடலுக்கு சென்று விடும் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

இந்த ஆய்வில் பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மாமன்ற உறுப்பினர் திருமதி கமலா செழியன், சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## ஆர்.கே.நகர் – இராயபுரம் தொகுதிகளில் 'வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்' கீழ்

# சி.எம்.டி.ஏ. சார்பில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு! அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்திட அலுவலர்கள் – ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுரை!



சென்னை, அக்.8–

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நேற்று (7.10.2025) கொளத்தூர் சட்டமன்ற தொகுதி, அகரம், ஜெகநாதன் தெருவில் சிஎம்டிஏ சார்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் கொளத்தூர் இரத்த சுத்திகரிப்பு மையம், ஜி.கே.எம். காலனி, ஜம்புலிங்கம் சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய திருமண மண்டபம், ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் தண்டையார்பேட்டை நவீன பேருந்து நிலையம், புது வண்ணாரப்பேட்டை, வ.உ.சி. நகரில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த விளையாட்டு மையம் மற்றும் தண்டையார் பேட்டை நெடுஞ்சாலையில் கட்டப்பட்டு வரும் "முதல்வர் படைப்பகம் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் முன்னேற்றப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

அதனைத் தொடந்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு – இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில், இராயபுரம் கல்மண்டபம் பேருந்து நிறுத்தத்தை சிஎம்டிஏ சார்பில் புதிதாக அமைக்கப்படவுள்ள குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தத்தின் இடத்தினை நேரில் ஆய்வு செய்து, பின்னர் துறைமுகம் சட்டமன்ற தொகுதியில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் வால்டாக்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய திருமண மண்டபம் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்ததாவது:–

தமிழ்நாடு முதல்வர் திராவிட மாடல் வழிகாட்டுதல்படி சுமார் ரூ.200 கோடி செலவில் 11 பேருந்து நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தற்போது நாம் நின்று கொண்டிருக்கும் இந்த ஆர்.கே.நகர் தொகுதி, தண்டையார்பேட்டை பேருந்து நிலையம், முதன்முதலில் போக்குவரத்து துறை துவக்கப்பட்டபோது உருவாக்கப்பட்ட பேருந்து நிலையம் ஆகும். 50 ஆண்டுகளுக்குப் பிறகு, திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பின்பு, சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில், இந்த பேருந்து நிலையத்தை நவீனப்படுத்த வேண்டும் என்று இந்த தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் எபினேசர் கோரிக்கை வைத்திருந்தார். அந்த கோரிக்கையை ஏற்று, ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்த பேருந்து நிலையத்தில், பயணிகள் பயன்பாட்டிற்கும், தங்கி பணியாற்றும் ஊழியர்களுக்குமான அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பேருந்து நிலையத்தில் உணவகம், கழிப்பிடங்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், தங்கும் வசதியுடன் கூடிய டார்மிட்ரி, அலுவலக கட்டிடங்கள் என சிஎம்டிஏ சார்பில் ரூ.26 கோடி மதிப்பீட்டில் இந்த மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தினமும் சுமார் 400 பேருந்துகள் இயக்கப்பட்டு, 15,000க்கும் மேற்பட்ட மக்கள் பயணிக்க இருக்கின்றனர். இதற்கேற்ப, அனைத்து அடிப்படை வசதிகளும் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளன.

### மேலும் உருவாகும் முக்கியமான பேருந்து நிலையங்கள்:

மாமல்லபுரம், செங்கல்பட்டு, ஆவடி, குத்தம்பாக்கம் போன்ற இடங்களில் சிறப்பு வசதிகளுடன் பேருந்து நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. குத்தம்பாக்கம் பேருந்து நிலையம் ரூ.350 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு, அடுத்த மாத இறுதிக்குள் திறக்கப்பட இருக்கிறது. பெரியார் நகர், திருவிக நகர் ஆகிய பேருந்து நிலையங்கள் தமிழ்நாடு முதல்வர் அவர்களால் மக்கள் பயன்பாட்டிற்கு அற்பணிக்கப்பட்டுள்ளது. ஆவடி, அம்பத்தூர், முல்லை நகர், கவியரசு கண்ணதாசன் நகர் ஆகிய பேருந்து நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன அதில் அம்பத்தூர் பேருந்து நிலையம் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்குத் திறக்கப்பட உள்ளது.

இவை அனைத்தும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்கள் மற்றும் சராசரி பொருளாதார நிலை கொண்ட பயணிகளுக்கேற்ப திட்டமிடப்பட்டுள்ளன. இந்த அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகள் தொடரும், ஏனெனில் மக்கள் மகிழ்ச்சியே, இந்த அரசின் மகிழ்ச்சி என்பது திராவிட மாடலின் அடிப்படை நோக்கமாகும்.

### கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் :

கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் தொடக்கத்தில் திறக்கப்படவில்லை. திறக்கப்பட்ட பின் கூடுதல் வசதிகள் தேவைப்பட்டன. அந்த வசதிகள் அரசு மூலம் ஏற்படுத்தப்பட்டன. அந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் விமான நிலையம் போல் அழகாக அமைந்துள்ளது என்று ஊடகங்கள் புகழ்ந்துள்ளன. சில குறைகள் இருந்தபோதும், அரசு தொடர்ந்து பயணிகளின் தேவைகளை நிறைவேற்றும் முயற்சியில் உள்ளது. ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபிநேசர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லாஉஷா, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மாநகர போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், உள்ளிட்ட அதிகாரிகள் தொடர்ந்து ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

### இராயபுரம் தற்காலிக பேருந்து நிலையம் :

இராயபுரத்தில் எம்டிசி மற்றும் தெற்கு ரயில்வே இட ஒதுக்கீடு மூலம் தற்காலிக பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாக பிரிக்கப்பட்ட நிலையில், போக்குவரத்து நெரிசலை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### பிராட்வே பஸ் நிறுத்தம் :

இராயபுரத்தில் எம்டிசி போக்குவரத்து துறையுடன் கலந்தாலோசித்த பொழுது 1000க்கும் மேற்பட்ட முறைகள் பேருந்துகள் வந்து செல்கின்ற ஒரு சூழல் இருக்கின்றது. ஏற்கனவே இராயபுரம் பகுதியில் உண்டான இடம் தான் அந்த இடம் அந்த இடத்திலே தென்னக ரயில்வே இடமிருந்து இடத்தைப் பெற்று அங்கே தற்காலிக பேருந்து நிலையத்தை அமைத்தோம் ஏற்கனவே ராயபுரத்தில் போக்குவரத்து கடுமையாக நெரிசல் ஏற்படுகிறது என்பதை முதல்வர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் இரண்டு இடங்களாக அந்த பேருந்து நிலையத்தை பிரிப்பதற்காக நம்முடைய துறைமுகத்தில் அமைந்திருக்கின்ற ஒரு இடத்தையும் சுற்றுலா துறை கட்டுபாட்டிலுள்ள ஒரு இடத்தையும் அதே போல் நீர்வளத் துறையிலும் அனுமதி பெற்று அங்கேயும் ஒரு தற்காலிக பேருந்து நிலையத்தை அமைத்துக் கொண்டிருக்கின்றோம். இப்படி இரண்டு இடங்களில் அந்த பேருந்து நிலையத்தை பிரிக்கின்ற பொழுது போக்குவரத்து நெரிசலும் கட்டுப்பாட்டுக்கு வரும் பயணிக்கின்ற பயனாளிகளுக்கும் பயணம் வெகுவாக இருக்கும் என்பதால், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் பிராட்வே பேருந்து நிலையம் ரூபாய் 800 கோடி திட்ட மதிப்பில் வெகு விரைவில் பணிகள் துவங்கப்பட இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தப் பணிகள் குறித்து ஆய்வுகள் மட்டுமல்லாமல் வடசென்னையை ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பாலப்பணிகள் நம்முடைய கணேசபுரம் பாலப்பணி அதேபோல் ஆர்.கே.நகர் பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பாலப்பணி இவைகளையும் முதல்வர் அவர்கள் தன்னுடைய ஆய்வுக்கு உட்பட்டு தன்னுடைய நேரடி கட்டுப்பாட்டில் தன்னுடைய நேரடி பார்வையில் இந்த பணிகளை செயல்படுத்துகின்ற ஒரு நல்ல சூழலை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்.

### வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை :

முதல்வர் அவர்களின் தலைமையில் வருகின்ற 22ஆம் தேதி பருவமழையை எதிர்கொள்வது குறித்து பருவமழையால் மக்களுடைய பாதுகாப்பை கருதி மக்களுடைய பிரச்சனைகளை தீர்த்து வைக்கின்ற ஒரு ஆய்வுக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கின்றார். அரசு விழிப்புடன் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. நம்முடைய பெருநகரத்தின் உடைய மேயர் அவர்களும் ஆய்வு மேற்கொண்டு வருகின்றார்கள். இது போன்ற தாழ்வான பகுதிகளில் கடந்த முறை ஏற்பட்ட பாதிப்புகள் எங்கெல்லாம் தண்ணீர் தேங்கி இருந்ததோ அந்த இடங்களில் எல்லாம் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவை கூட இந்த மாதம் 15ஆம் தேதிக்குள் நிறைவு செய்ய உத்தரவிட்டிருக்கின்றார்கள். 15ஆம் தேதிக்கு பிறகு புதிதாக சாலை பணிகளை எதையும் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று மாநகராட்சி உத்தரவிட்டிருக்கின்றது. அந்த வகையில் விழிப்போடு மக்களை பாதுகாக்கின்ற ஒரு அரணாக இந்த திராவிட மாடல் அரசுக்கு இது போன்ற நடவடிக்கைகள் ஒரு சான்று.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபிநேசர், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரிம்ஸ் மூர்த்தி, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மாநகராட்சி நகரமைப்பு குழுத்தலைவர் இளைய அருணா, நகர் நல அலுவலர் டாக்டர் ஜெகதீசன், மண்டலக் குழுத்தலை வர்கள் திருமதி.சரிதா மகேஷ்குமார், பி.ஸ்ரீராமுலு, நேதாஜி யூ.கணேசன், சிஎம்டிஏ தலைமைப் பொறியா ளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.பாலமுருகன், ராஜன்பாபு, எம்டிசி பொது மேலாளர் (இயக்கம்) நெடுஞ்செழியன், மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி. பவித்ரா நரேந்திரன், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.